# இந்திய ரிசர்வ் வங்கி (ஆர்பிஐ)
## செலாவணி மேலாண்மைத் துறை
## குடிமக்களின் சாசனம்

**1. குடிமக்களின் சாசனத்தின் குறிக்கோள்**

ரூபாய் நோட்டுக்கள் மற்றும் நாணயங்களை மாற்றிக் கொள்ளும் விஷயத்தில், இந்திய ரிசர்வ் வங்கியால் வழங்கப்படுகிற பல்வேறு தகவல்கள் குறித்ததும், ஆர்பிஐ சிக்கல் தீர்ப்பு அலுவலகங்கள் மற்றும் வர்த்தக ரீதியான வங்கிக் கிளைகள் ஆகியவற்றில் வழங்கப்படுகிற சேவைகளின் பொதுவான தரங்கள் குறித்ததுமான தகவல்களை குடிமக்களின் சாசனம் வழங்குகிறது.

**2. ஆர்பிஐ சிக்கல் தீர்ப்பு அலுவலகங்களில் கிடைக்கிற சேவைகள்**

சிக்கல் தீர்ப்புத் துறை (Issue Department) செயல்படுகிற ஆர்பிஐ அலுவலகன்ங்கள், தற்போது புழக்கத்தில் இல்லாத அல்லது தேய்ந்து போன நாணயங்கள் உட்பட, கறைபட்ட மற்றும் சிதிலமடைந்த ரூபாய் நோட்டுக்கள் மற்றும் நாணயங்கள் உள்ளிட்ட தங்களது ரூபாய் நோட்டுக்களை மாற்றிக் கொள்வதற்கான வசதியை பொதுமக்களுக்கு அளிக்கிறது. வேலை நேரங்களின் போது, தனது கவுண்டர்களில், இலவசமாகவே ரூபாய் நோட்டுக்களை மாற்றுக் கொள்வதற்கான வசதியை அளிப்பதற்கு, வங்கி தன்னை அர்ப்பணித்துக் கொண்டுள்ளது.

**3. ரூபாய் நோட்டுக்களை மாற்றிக் கொள்வதற்கான வசதியை வழங்குகிற ஆர்பிஐ அலுவலகங்களின் பெயர்கள்**

இவ்வசதி, அகமதாபாத், பெங்களூறு, பெலாபூர் (நாவி மும்பை), போபால், புவனேஷ்வர், சண்டிகார், சென்னை, கவுகாத்தி, ஹைதராபாத், ஜெய்ப்பூர், ஜம்மு, கான்பூர், கொச்சி, கொல்த்தா, லக்னோ, மும்பை, நாக்பூர், புது டில்லி, பாட்னா மற்றும் திருவனந்தபுரம் ஆகிய ஊர்களில் அமைந்துள்ள வங்கியின் பிராந்திய அலுவலகங்களின் கவுண்டர்களில் வழங்கப்படுகிறது.

**4. காயின் டிஸ்பென்சர் மெஷின்களின் உதவி கொண்டு, ரூபாய் நோட்டுக்களை நாணயங்களாக மாற்றிக் கொள்ளுதல்**

ரிசர்வ் வங்கியின் பிராந்திய அலுவலகங்களின் வங்கிக் கூடங்களில் (banking halls) அமைத்துள்ள காயின் டிஸ்பென்சர் மெஷின்களை உபயோகித்தும், பொதுமக்கள் தங்களது ரூபாய் நோட்டுக்களை நாணயங்களாக மாற்றிக் கொள்ளலாம்.

**5. கறைபடிந்த மற்றும் சிதிலமடைந்த ரூபாய் நோட்டுக்கள் மற்றும் நாணயங்களை, வங்கியின் பொது கவுண்டர்களில் மாற்றிக் கொள்ளுதல்**

வங்கியின் அலுவலகங்களின் கவுண்டர்களில், பொதுமக்கள் பின்வரும் வசதிகளைத் தாங்களே பெற்றுக் கொள்ளலாம்.

(அ) கறைபடிந்த ரூபாய் நோட்டுக்களை மாற்றிக் கொள்ளுதல். அன்றாட உபயோகத்தின் காரணமாக, சேதமடைந்து போயிருக்கிற அல்லது சிறிய வெட்டுக்கள் தோன்றியிருக்கிற ரூபாய் நோட்டுக்கள், அல்லது எண்ணை, வண்ணம், மை, போன்றவற்றால் உருக்குலைந்து போயுள்ள ரூபாய் நோட்டுக்கள் கறைபடிந்த நோட்டுக்களாகக் கருதப்படும். எளிதாக ரூபாய் நோட்டுக்களை மாற்றிக் கொள்வதற்கு வசதி செய்து கொடுக்கும் வகையில், குத்துவாக்கில் மையத்தில் அல்லது மையத்திற்கு அருகில் இரண்டாகக் கிழிந்து, எண்கள் தெளிவாக இருக்கிற ரூபாய் நோட்டுக்கள், கறைபடிந்த நோட்டுக்களாகவே கருதப்படும். அரசியல் அல்லது மத கோஷங்கள் எழுதப்பட்டுள்ள ரூபாய் நோட்டுக்களை எந்தச் சூழ்நிலைகளின் கீழும் மாற்றிக் கொள்ளக் கூடியதல்ல.

(ஆ) சிதிலமடைந்த ரூபாய் நோட்டுக்களை மாற்றிக் கொள்ளுதல். ஒரு சிதிலமடைந்த ரூபாய் நோட்டு என்பது, கொடுக்கிற நோட்டு அதன் பரப்பளவில் பாதியை விடக் குறைவாக இல்லாமலிருக்கிற பட்சத்திலும் மேலும் துண்டுதுண்டாகக் கொடுக்கிற பட்சத்தில் அதன் ஒவ்வொரு பகுதியும் 'நியமன அலுவலரின்' கருத்தின் படி [ஆர்பிஐ (புது ரூபாய் நோட்டு திருப்பிக் கொடுத்தல்) விதிகளில் வரையறுத்துள்ளபடி] அதே நோட்டின் அடையாளம் காணக்கூடியதாக இருக்கிற பட்சத்திலும், நோட்டின் ஒரு பகுதி காணாமல் போயிருக்கிற, அல்லது துண்டு துண்டாகச் சேர்த்துள்ள நோட்டு என்பதாகும். 1975 ஆம் ஆண்டின் ஆர்பிஐ (புது நோட்டுக்களை திருப்பிக் கொடுத்தல்) விதிகள் (1980 ஆம் ஆண்டு வரை திருத்தியபடி), "பிரசுரங்கள்" http://www.rbi.org.in என்ற தலைப்பின் கீழும், "அவ்வப்போதைய பிரசுரங்கள்" என்ற துணைத் தலைப்பின் கீழும், என்ற ஆர்பிஐ வலைத்தளத்தில் அஞ்சலிடப்பட்டுள்ளது.

(இ) புழக்கத்தில் இல்லாத நாணயங்கள் உள்ளிட்ட நாணயங்களை ரூபாய் நோட்டுக்களாக அல்லது நாணயங்களாக மாற்றிக் கொள்ளுதல்.

**6. முப்பூட்டுக் கூடு (Triple Lock Receptacle) அல்லது அஞ்சல் வழியாக பெற்றுக் கொண்ட சிதிலமடைந்த / துண்டாகிப் போன ரூபாய் நோட்டுக்களை மாற்றிக் கொள்ளுதல்**

தங்களது சிதிலமடைந்த / துண்டாகிப் போன ரூபாய் நோட்டுக்களைக் கொடுப்பதற்காக வங்கியின் கவுண்டர்களில் காத்திருக்க முடியாத பொதுமக்களுக்கு ரூபாய் நோட்டுக்களை மாற்றிக் கொள்ளும் வசதியை வழங்குவதற்காக, "முப்பூட்டுக் கூடு" (Triple Lock Receptacle (TLR)) என்று அழைக்கப்படுகிற ஒரு பூட்டிய பெட்டியில் சிதிலமடைந்த / துண்டாகிப் போன நோட்டுக்களை அனுப்பி வைப்பதற்கான ஒரு வசதியை இவ்வங்கியின் அலுவலகங்கள் வழங்குகின்றன. அந்த டீஎல்ஆர் பெட்டி, குறிப்பிட்டதோர் கவுண்டரின் அருகில் வைக்கப்படுகிறது, மேலும் விசாரணை கவுண்டரிலிருந்து பெற்றுக் கொள்ளக் கூடியதோர் உறையில் ரூபாய் நோட்டுக்களை வைத்து, அதனை ஒட்டி அந்தப் பெட்டியில் போட்டு விடலாம். ரூபாய் நோட்டுக்களைப் போடுபவர்கள், அவர்கள் போடுகிற ரூபாய் நோட்டுக்கள் குறித்த விவரக் குறிப்புகளையும், அவர்களது பெயரையும், வங்கிக் கணக்கு எண்ணையும் அந்தக் கவரில் எழுதிவிட வேண்டும். சிதிலமடைந்த ரூபாய் நோட்டுக்களை, பொதுமக்கள் காப்பீடு செய்த பதிவு அஞ்சல் மூலமாகவும், ஆர்பீஐ அலுவலகங்களுக்கு அனுப்பி வைக்கலாம். அவர்களது சொந்த நலனுக்காக, அவ்வுறைகளை பதிவு செய்த மற்றும் காப்பீடு செய்த அஞ்சல் வாயிலாகத் தான் அனுப்ப வேண்டும். புது ரூபாய் நோட்டுக்களைத் திருப்பிக் கொடுத்தல் (Note Refund Rules) விதிகளின் கீழ் கொடுக்கப்படக் கூடிய ரூபாய் நோட்டுக்களின் திருப்பிக் கொடுக்கும் பண மதிப்பு, தற்போது கட்டணமில்லாததாக உள்ள, மின்னணு பணமாற்றச் சேவை / மின்னணு நிதி மாற்றச் சேவை (Electronic Clearing Service/Electronic Fund Transfer (EFT)) மூலமாக, ரூபாய் நோட்டுக்களை அனுப்பி வைத்தவர்களின் வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்படும். ரூபாய் நோட்டுக்களை அனுப்பி வைத்தவருக்கு வங்கிக் கணக்கு இல்லை என்றாலோ அல்லது அவர் வசிக்கிற ஊரில் மின்னணுப் பரிமாற்ற (clearing service/provision of EFT) வசதி இல்லை என்றாலோ, அந்தப் பணப்பரிமாற்ற மதிப்பு, பணத்தை அனுப்பி வைத்தவரின் செலவில் வங்கி வரைவோலை / பண அஞ்சல் மூலமாகத் திருப்பிக் கொடுக்கப்படும். இந்த மின்னணுப் பணப்பரிமாற்ற வசதி (TLR) சிதிலமடைந்த / துண்டாகிப் போன ரூபாய் நோட்டுக்களுக்கு மட்டுமே கிடைக்கிறது, கறைபடிந்த நோட்டுக்களுக்குக் கிடைப்பதில்லை.

**7. சேவை குறித்த பொதுவான நிபந்தனைகள்**

(i) வங்கியின் கவுண்டர்களில் கிடைக்கிற பணப்பரிமாற்ற வசதி, அந்தந்த பிராந்திய அலுவலகத்தின் வேலை நேரங்களின் போது, கட்டணமில்லாமலேயே கிடைக்கிறது.

(ii) ஒவ்வொரு அலுவலகத்திலும் பணப்பரிமாற்ற வசதி செய்யப்பட்டுள்ள கவுண்டர்களின் வரிசை எண்கள், வங்கியின் ஒவ்வொரு அலுவலகத்தின் வங்கிக் கூடத்திலும் காண்பிக்கப்பட்டுள்ளது.

(iii) ஒட்டி மூடிய உறைகளில் உள்ள சிதிலமடைந்த / துண்டாகிப் போன ரூபாய் நோட்டுக்கள், இயல்பான வேலை நேரங்கள் முடிந்த பிறகு ஒரு மணி நேரம் வரைக்கும் முப்பூட்டு கூடில் (Triple Lock Receptacle) பெற்றுக் கொள்ளப்படுகிறது.

(iv) சிதிலமடைந்த / துண்டாகிப் போன ரூபாய் நோட்டுக்கள், இந்திய ரிசர்வ் வங்கியின் (புது நோட்டுக்களைத் திருப்பிக் கொடுத்தல்) விதிகளின் கீழ், வங்கியால் பரிமாற்றம் செய்து கொடுக்கப்படுகின்றன. அவ்விதிகளின் கீழ், சிதிலமடைந்த / துண்டாகிப் போன ரூபாய் நோட்டிற்கு பணம் திருப்பிக் கொடுக்க முடியாது என்பதாகக் காணப்படுகிற பட்சத்தில், அதுவே நிராகரிக்கப்பட்டு, நிராகரிக்கப்பட்டது குறித்த தகவல் ரூபாய் நோட்டை அனுப்பி வைத்தவருக்கு அனுப்பி வைக்கப்படும். நிராகரிக்கப்பட்ட ரூபாய் நோட்டை வங்கியே வைத்துக் கொண்டு, நான்கு மாதங்களுக்குப் பிறகு அழிக்கப்பட்டுவிடும்.

(v) போலியாக / கள்ளத்தனமாகத் தயாரிக்கப்பட்டதாகக் காணப்படுகிற ரூபாய் நோட்டுக்கள் / நாணயங்கள் பறிமுதல் செய்யப்படுகிறது மேலும் அதற்கான பண மதிப்பு எதுவும் கொடுக்கப்படுவதில்லை. அது போன்ற ரூபாய் நோட்டுக்கள் / நாணயங்களை, அனுப்பி வைத்தவருக்குத் தகவல் தெரிவித்து விட்டு, வங்கியே வைத்துக் கொள்கிறது.

(vi) ஆர்பிஐ -ஆல் வழங்கப்பட்டுள்ள ரூபாய் நோட்டுக்கள் குறித்த பாதுகாப்பு சிறப்பம்சங்கள், http://www.rbi.org.in/currency/banknotes.html என்ற அவ்வங்கியின் வலைத்தளத்தில் பொதுமக்களுக்காக வைக்கப்பட்டுள்ளது.

(vii) எந்தவொரு ஆர்பிஐ அலுவலகங்களிலும் மேற்படி பணப் பரிமாற்ற வசதியைப் பெற்றுக் கொள்வதில் பொதுமக்கள் யாருக்கும் சிரமம் எதுவுமிருக்கிற பட்சத்தில், அல்லது இலஞ்சம் எதுவும் கேட்கப்படுகிற பட்சத்தில், அவர்கள் பிராந்திய அலுவலகத்தின் விசாரணை கவுண்டரில் வைக்கப்பட்டுள்ள புகார் புத்தகம் / பதிவேட்டில் ஒரு புகாரைப் பதிவு செய்யலாம் அல்லது உரிய ஆர்பிஐ அலுவலகத்தின் சிக்கல் தீர்ப்புத் துறையின் பொறுப்பில் உள்ள அதிகாரியின் கவனத்திற்குக் கொண்டு வரலாம். பொறுப்பு அதிகாரிகளின் பதவியும், முகவரிகளும் பின்னிணைப்பில் கொடுக்கப்படுகின்றன.

(xiv) ரிசர்வ் வங்கியின் ஊழியர்களும் அதிகாரிகளும், பொதுமக்கள் ஒவ்வொருவரையும் பணிவன்புடனும், அனுசரணையுடனும் நடத்துவார்கள். வாடிக்கையாளரின் விசாரணைகள் மற்றும் புகார்களுக்கு உதவிகரமானவர்களாக இருந்து, உரிய நேரத்தில் உங்களைக் கவனிப்பார்கள்.

**8. கறைபடிந்த மற்றும் சிதிலமடைந்த ரூபாய் நோட்டுக்கள் மற்றும் நாணயங்களை, வர்த்தக வங்கிகளின் கவுண்டர்களில் மாற்றிக் கொள்ளுதல்**

(i) தேர்ந்தெடுத்த மையங்களில் தான் ரிசர்வ் வங்கியின் அலுவலகங்கள் அமைந்துள்ளன. ஆகவே, கறைபடிந்த ரூபாய் நோட்டுக்களை மாற்றித்தருவதற்கும், நோட்டுக்களை நாணயங்களாக மாற்றித் தருவதற்கும், நாணயங்களை நோட்டுக்களாக மாற்றித் தருவதற்குமான வசதியை வழங்குவதற்காக, பட்டியலிட்டுள்ள வர்த்தக வங்கிகளின் கிளைகளில் ஏற்பாடுகளை செய்துள்ளது. பொதுத்துறை வங்கிகளின் அனைத்துக் கிளைகளிலும், தனியார்துறை வங்கியின் பணவறை வசதியுள்ள கிளைகளிலும் கறைபடிந்த ரூபாய் நோட்டுக்களை மாற்றிக் கொள்வதற்கான வசதி கிடைக்கிற அதே வேளையில், சிதிலமடைந்த / துண்டாகிப் போன ரூபாய் நோட்டுக்களை மாற்றிக் கொள்வதற்கான வசதி, வர்த்தக வங்கிகளின் பணவறை வசதியுள்ள கிளைகளில் மட்டுமே கிடைக்கிறது. சிதிலமடைந்த ரூபாய் நோட்டுக்களை மாற்றிக் கொள்ள முடிகிற, பணவறை வசதியுள்ள கிளைகள் குறித்ததோர் பட்டியல், ஆர்பிஐ அலுவலகங்களின் விசாரணை கவுண்டரில் கிடைக்கிறது. அது போன்ற பணவறை வசதியுள்ள கிளைகளில், சிதிலமடைந்த ரூபாய் நோட்டுக்களை மாற்றிக் கொள்ளும் வசதி கிடைப்பது தொடர்பான அறிவுறுத்தல்களும் அறிவிப்புப் பலகையில் உள்ளன. அதுபோன்ற கிளைகள் எதுவும் பணப்பரிமாற்ற வசதியை செய்து தர மறுக்கிற நிலையில், அதனால் துயரமடைகிற பொதுமக்கள், உரிய வர்த்தக வங்கியின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் / சிஈஓ அவர்களிடம் புகார் செய்யலாம். அவர்களது குறை தீர்த்து வைக்கப்படாத நிலையில், அந்த விஷயத்தை இந்திய ரிசர்வ் வங்கியின் உரிய பிராந்திய அலுவலகத்தின் கவனத்திற்குக் கொண்டுவரலாம்.

(ii) மற்ற வங்கிகளின் கிளைகள், அதாவது கூட்டுறவு வங்கிகள் மற்றும் பிராந்திய ஊரக வங்கிகள் ஆகியவை, தங்களது சொந்த வசதிக்கு ஏற்ப ரூபாய் நோட்டுக்களையும், நாணயங்களையும் மாற்றித் தருவதற்கு எதிர்பார்க்கப்படுகிறார்கள். ஆயினும், சிதிலமடைந்த ரூபாய் நோட்டுக்களை மாற்றித் தருவதற்கு அவர்களுக்கு எவ்வித அதிகாரங்களும் இல்லை.

**9. ஆலோசனை/கருத்து**

குடிமக்களின் சாசனம் தொடர்பாக ஆலோசனை/கருத்து எதையும் பொதுமக்கள் வழங்க விரும்புகிற நிலையில், அவர்கள், தலைமைப் பொது மேலாளர், செலாவணி மேலாண்மைத் துறை, இந்திய ரிசர்வ் வங்கி, மத்திய அலுவலகம், ஷாஹித் பகத் சிங் மார்க், மும்பை - 400 001 என்ற முகவரிக்கு கடிதம் எழுதலாம்.

**பின்னிணைப்பு**

**ஆர்பிஐ சிக்கல் தீர்ப்பு அலுவலகங்களின் முகவரிகள் மற்றும் அவற்றின் ஆட்சி எல்லை**

| வ. எண். | ஆர்பிஐ அலுவலகத்தின் எண், பெயர் மற்றும் முகவரி | ஆட்சி எல்லை |
|---|---|---|
| 1 | பொது மேலாளர் இந்திய ரிசர்வ் வங்கி,<br>சிக்கல் தீர்ப்புத் துறை,<br>2வது தளம், காந்தி பாலம் அருகில்,<br>அகமதாபாத் 380 014. | குஜராத் மாநிலம் மற்றும் தாத்ரா மற்றும் நாகர் ஹவேலி மற்றும் டாமன் மற்றும் டையு யூனியன் பிரதேசங்கள் |
| 2 | பொது மேலாளர் இந்திய ரிசர்வ் வங்கி,<br>சிக்கல் தீர்ப்புத் துறை 10/3/8,<br>ருபதுங்கா ரோடு, பெங்களூரு - 560,001 | கர்நாடகா மாநிலம் |
| 3 | துணைப் பொது மேலாளர் இந்திய ரிசர்வ் வங்கி,<br>சிக்கல் தீர்ப்புத் துறை பண்டிட் ஜவஹர், லால் நேரு மார்க்,<br>தபால் பெட்டி எண் 16, புவனேஷ்வர் - 751 001. | ஒரிசா மாநிலம். |
| 4 | பொது மேலாளர் இந்திய ரிசர்வ் வங்கி,<br>சிக்கல் தீர்ப்புத் துறை முக்கிய கட்டிடம்,<br>ஷாஹித் பகத் சிங் மார்க்,<br>கோட்டை, மும்பை 400 001. | கிரேட்டர் மும்பை, அதாவது மும்பைத் தீவு மற்றும் புறநகர மாவட்டங்கள் (உத்தேசமாக மேற்கத்திய மற்றும் மத்திய ரெயில்வே யின் முறையே தாஹிசார் மற்றும் முலாண்ட் ஆகியவற்றை இணைக்கிற கோட்டின் தெற்கே) |
| 5 | துணைப் பொது மேலாளர் இந்திய ரிசர்வ் வங்கி,<br>சிக்கல் தீர்ப்புத் துறை ஹொஷங்காபாத் ரோடு,<br>தபால் பெட்டி எண் 32, போபால் 462 001. | மத்திய பிரதேச மாநிலம் |
| 6 | துணைப் பொது மேலாளர் இந்திய ரிசர்வ் வங்கி,<br>சிக்கல் தீர்ப்புத் துறை பிளாட் நெ. 3,<br>செக்டார் 10, எச்.எச். நிர்மலா தேவி மார்க்,<br>சிபிடி, பெலார்பூர், நாவி மும்பை - 400 614. | மஹாராஷ்டிரா மாநிலத்தில் உள்ள அகமெத்நகர், கோல்ஹாபூர், நாசிக், பூனே, ரெய்காட், ரத்னகிரி, சாங்லி, சத்தாரா, சிந்துதுர்க், சோலாபூர், மற்றும் தானே மவட்டங்கள் மற்றும் கோவா மாநிலம். |
| 7 | துணைப் பொது மேலாளர் இந்திய ரிசர்வ் வங்கி,<br>சிக்கல் தீர்ப்புத் துறை மத்திய விஸ்டா,<br>டெலிஃபோன் பவன் எதிரில் செக்டார் 17, சண்டிகார் - 160 017. | ஹரியானா, ஹிமாச்சல் பிரதேஷ், பஞ்சாப் மாநிலங்கள் மற்றும் சண்டிகார் யூனியன் பிரதேசம் |
| 8 | பொது மேலாளர் இந்திய ரிசர்வ் வங்கி,<br>சிக்கல் தீர்ப்புத் துறை ஃபோர்ட் கிளேசிஸ் நெ. 16,<br>ராஜாஜி சாலை, தபால் பெட்டி எண் 40, சென்னை - 600 001. | தமிழ்நாடு மாநிலம் மற்றும் பாண்டிச்சேரி யூனியன் பிரதேசம். |
| 9 | பொது மேலாளர் இந்திய ரிசர்வ் வங்கி,<br>சிக்கல் தீர்ப்புத் துறை ஸ்டேஷன் ரோடு,<br>பான்பஸார், தபால் பெட்டி எண் 120,<br>கவுகாத்தி - 781 001. | அஸ்ஸாம், அருணாச்சலப் பிரதேசம், மணிப்பூர், மேகலாயா, மிசோராம், நாகாலாந்து மற்றும் திரிபுரா மாநிலங்கள் |
| 10 | பொது மேலாளர் சிக்கல் தீர்ப்புத் துறை இந்திய ரிசர்வ் வங்கி,<br>6-1-65, தலைமைச் செயலக சாலை,<br>சாய்ஃபாபாத், ஹைதராபாத் - 500 004. | ஆந்திரப் பிரதேச மாநிலம் |
| 11 | துணைப் பொது மேலாளர் இந்திய ரிசர்வ் வங்கி,<br>சிக்கல் தீர்ப்புத் துறை ரெயில் ஹெட்,<br>காம்ப்ளெக்ஸ், ஜம்மு - 180 012. | ஜம்மு காஷ்மீர் மாநிலம் |
| 12 | பொது மேலாளர் சிக்கல் தீர்ப்புத் துறை இந்திய ரிசர்வ் வங்கி,<br>ரம்பாக் சர்க்கிள், டோங் ரோடு,<br>தபால் பெட்டி எண் 12,<br>ஜெய்ப்பூர் - 302 004. | ராஜஸ்தான் மாநிலம் |
| 13 | பொது மேலாளர் சிக்கல் தீர்ப்புத் துறை இந்திய ரிசர்வ் வங்கி எம்ஜி மார்க்,<br>தபால் பெட்டி எண் 82/142 கான்பூர் - 208001. | உத்திரப் பிரதேசம் மற்றும் உத்திராஞ்சல் மாநிலம் |
| 14 | பொது மேலாளர் சிக்கல் தீர்ப்புத் துறை இந்திய ரிசர்வ் வங்கி,<br>தபால் பெட்டி எண். 49,<br>கொல்கொத்தா - 700 001. | சிக்கிம், மேற்கு வங்காள மாநிலங்கள், மற்றும் அந்தமான் மற்றும் நிகோபார் தீவுகள் யூனியன் பிரதேசம் |
| 15 | பொது மேலாளர் இந்திய ரிசர்வ் வங்கி,<br>சிக்கல் தீர்ப்புத்துறை,<br>முக்கிய அலுவலகக் கட்டிடம், டாக்டர்,<br>ராகவேந்திரா ராவ் ரோடு,<br>தபால் பெட்டி எண். 15, சிவில் லைன்ஸ், நாக்பூர் - 440 001. | சட்டிஷ்கார் மாநிலம் மற்றும் மஹாராஷ்டிரா மாநிலத்தில் உள்ள அகோலா, அமராவதி, அவுரங்காபாத், பீட், பந்தாரா, புல்தானா, சந்திராபூர், தூலே, கேசிரோலி, ஹிங்கோலி, ஜால்கயோன், ஜால்நா, லட்டூர், நாக்பூர், நான்ண்டெட், ஓஸ்மனாபாத், பார்பானி, வார்தா, யவட்மால் மாவட்டங்கள். |
| 16 | பொது மேலாளர் இந்திய ரிசர்வ் வங்கி,<br>சிக்கல் தீர்ப்புத் துறை<br>6, சன்சட் மார்க்,<br>புது டில்லி - 110 001. | டெல்லி மாநிலம் |
| 17 | துணைப் பொது மேலாளர் இந்திய ரிசர்வ் வங்கி,<br>சிக்கல் தீர்ப்புத் துறை,<br>தெற்கு காந்தி, மைதானம் தபால் பெட்டி எண். 162,<br>பாட்னா - 800 001. | பீகார் மற்றும் ஜார்கண்ட் மாநிலம் |
| 18 | துணைப் பொது மேலாளர் இந்திய ரிசர்வ் வங்கி,<br>சிக்கல் தீர்ப்புத் துறை, பேக்கரி ஜங்ஷன்,<br>தபால் பெட்டி எண். 6507,<br>திருவனந்தபுரம் - 695 033. | கேரளா மாநிலம் மற்றும் லட்சத்தீவு யூனியன் பிரதேசம் |